பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
02 09 2025 TUESDAY 12.40 PM
ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இரண்டு நாள் பயணமாக இன்று தமிழகம் வந்துள்ளார்.

- இந்தியாவில் தயாரிக்கப்படும் செமி கண்டெக்டர் சிப்புகள், உலகில் பெரிய அளவிலான மாற்றத்தை ஏற்படுத்தும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- செமி கண்டெக்டர் சிப்-ஐ உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து இந்தியா சாதனை படைத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

- விவசாயிகளின் கடின உழைப்பு காரணமாக நாட்டில் தேங்காய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி அதிகரித்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று Baoji-ல் தொடங்கியது.

--- இனி விரிவான செய்திகள் –

<<<<<<>>>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இரண்டு நாள் பயணமாக இன்று தமிழகம் வந்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் அவரை, தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி, துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

பின்னர் குடியரசுத் தலைவர் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தற்போது நடைபெற்றுவரும் சிட்டி யூனியன் வங்கியின் நிறுவன தின விழாவில் பங்கேற்றுள்ளார்.

ஆளுநர் திரு ஆர் என் ரவி, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், மாநில ச்சர் திருமதி கீதா ஜீவன் உள்ளிட்டோரும் இதில் பங்கேற்றுள்ளனர்.

<<<<<<>>>>>>

இந்தியாவில் தயாரிக்கப்படும் செமி கண்டெக்டர் சிப்புகள், உலகில் பெரிய அளவிலான மாற்றத்தை ஏற்படுத்தும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செமிகான் இந்தியா மாநாட்டை தொடங்கிவைத்து பேசிய அவர், செமி கண்டெக்டர் தொழில்துறையில் நாடு குறுகிய காலத்தில் அபார வளர்ச்சி கண்டுள்ளதாக கூறினார்.

இத்துறையில் புதிய கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்படுவதுடன் முதலீடுகளும் அதிகரித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியா மீது நம்பிக்கை வைத்துள்ள உலக நாடுகள் செமி கண்டெக்டர் உற்பத்தியில் இணைந்து பணியாற்ற தயாராக உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் பேசிய மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், உலகளாவிய பொருளாதார தேக்கநிலைக்கு இடையிலும் இந்தியா நிலையான வளர்ச்சி பெற்று வருவதாக கூறினார்.

செமி கண்டெக்டர் சிப்-ஐ உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து இந்தியா சாதனை படைத்துள்ளதாக அமைச்சர் பெருமிதம் தெரிவித்தார்.

முன்னதாக இந்த நிகழ்ச்சியில், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட விக்ரம் -32 பிட் பிரசசர் மற்றும் டெஸ்ட் சிப்புகளை திரு அஷ்வினி வைஷ்ணவ், பிரதமரிடம் வழங்கினார்.

<<<<<<>>>>>>

உலக தேங்காய் தினம் இன்று கொண்டாடப்படுகிறது

இதையொட்டி, மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தென்னை விவசாயிகளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தென்னை விவசாயிகளின் கடின உழைப்பு காரணமாக நாட்டில் தேங்காய் உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் வர்த்தகம் தொடர்ந்து அதிகரித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் பண்டிகை, வழிபாடு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் தேங்காய் பயன்படுத்தப்படுவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இனிப்புகள் மற்றும் உணவு வகைகளுக்கு தேங்காய் பயன்படுத்தப்படுவதாகவும், தென்னை நாரிலிருந்து பல்வேறு பொருட்கள் தயாரிக்கப்படுவதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இதனிடையே, தேங்காய் தினத்தையொட்டி, தென்னை விவசாயிகளுக்கான கடனுதவி அதிகரிக்கப்படும் என்று கேரள தென்னை வளர்ச்சி வாரியம் அறிவித்துள்ளது.

இந்தாண்டு இரண்டரை லட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுவதுடன், இப்பணியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஒரு தென்னங்கன்று வளர்ப்பதற்கான நிதியுதவி நான்கு ரூபாயிலிருந்து, 45 ரூபாயாக அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று தென்னங்கன்றுகளை நடுவதற்கான நிதியுதவியும் 40 ரூபாயிலிருந்து 350 ரூபாயாக அதிகரிக்கப்படும் என்று கேரள தென்னை வளர்ச்சி வாரியம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

வியட்நாமின் தேசிய தினத்தையொட்டி, அந்நாட்டு மக்களுக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்தியா - வியட்நாம் இடையிலான நீடித்த ஒத்துழைப்பு நிலையான வளர்ச்சியுடன் வலுவடைந்து வருவதாக கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

ஜெர்மன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு Johann Wadephul இரண்டு நாள் அரசுமுறைப்பயணமாக இன்று இந்தியா வந்துள்ளார்.

தமது பயணத்தின் முதல் நாளான இன்று பெங்களூருவில் இஸ்ரோ தலைமையகத்தை பார்வையிடும் அவர், விண்வெளித் திட்டங்களில் இந்தியாவுடன் இணைந்து ஜெர்மனி பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசனை நடத்தவுள்ளார்.

பின்னர் புதுதில்லி செல்லும் அவர், நாளை வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் உள்ளிட்டோருடன் இருநாட்டு குழுக்கள் அளவிலான பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

குறிப்பாக, பாதுகாப்பு, பசுமை எரிசக்தி, டிஜிட்டல் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து திரு Johann Wadephul ஆலோசனை நடத்தவுள்ளார்.

<<<<<<>>>>>>

மகளிர் தொழில்முனைவோரின் முன்னேற்றத்திற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பீகார் மாநில மகளிர் வாழ்வாதார கூட்டுறவு கடன் சங்கத்தை இன்று தொடங்கிவைக்க உள்ளதையொட்டி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

கிராமப்புறங்களை சேர்ந்த மகளிர் தொழில் முனைவோருக்கு குறைந்த வட்டியில் கடனுதவி வழங்கும் நோக்கில் இந்த சங்கம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த சங்கத்தின் பணப்பரிவர்த்தனைகள் முற்றிலும் டிஜிட்டல் முறையில் மேற்கொள்ளப்படுவதன் மூலம் அதன் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங், இரண்டு நாள் பயணமாக நாளை மறுநாள் ஐஸ்லாந்து செல்கிறார்.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், திரு கீர்த்தி வர்தன் சிங் தமது இந்த பயணத்தின்போது இந்தியா – Nordic Track கலந்துரையாடலின் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஐஸ்லாந்து நாடாளுமன்ற சபாநாயகர், அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் உள்ளிட்டோரையும் அவர் சந்தித்து பேசவுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

ஐஸ்லாந்தில் வசிக்கும் இந்திய வம்சவாளியினருடனும் திரு கீர்த்தி வர்தன் சிங் கலந்துரையாட உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

*கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து சமுாயத்தை மேம்படுத்தும் நோக்கில் மத்திய அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.*

*தமிழகத்தின் ராணிப்பேட்டை மாவட்டம் சித்தேரி கிராமத்தில் இத்திட்டத்தின்கீழ், பனை மரங்கள் மற்றும் பழ மரக்கன்றுகள் நடப்பட்டு இயற்கை வளம் பாதுகாக்கப்படுவதாக ஊராட்சி மன்றத்தலைவர் திரு சுந்தரம் கலைச்செழியன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(Voice Byte –சுந்தரம் கலைச்செழியன் - 45 Sec. )*

*இந்த நடவடிக்கை மூலம் தங்களது கிராமத்தை பசுமையானதாக மாற்றியுள்ளதாக 100 நாள் வேலைத்திட்ட பணியாளர் திருமதி லட்சுமி தெரிவித்தார்.*

*(Voice Byte – லட்சுமி - 20 Sec. )*

*<<<<<<>>>>>>*

*ஐக்கிய அரபு எமிரேட்டிற்கான இந்திய தூதராக திரு தீபக் மிட்டல் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*1998-ஆம் ஆண்டு தொகுப்பை சேர்ந்த வெளியுறவுப்பணி அதிகாரியான திரு தீபக் மிட்டல், தமது புதிய பொறுப்பை விரைவில் ஏற்றுக்கொள்ள உள்ளதாக வெளியுறவு அமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*இமாச்சலப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், ஹரியானா, பஞ்சாப் மாநிலங்களின் ஒரு சிலபகுதிகளில் இன்று அதி கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*ராஜஸ்தான் மாநிலத்தின் ஒரு சில பகுதிகளிலும், மத்தியப்பிரதேசம், உத்தரகண்ட் மற்றும் ஜம்மு காஷ்மீரிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.*

*இமாச்சலப்பிரதேசத்தில் அடுத்த ஐந்து தினங்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்ற எச்சரிக்கையடுத்து Kalka – சிம்லா இடையேயான மலைரயில் போக்குவரத்து வரும் ஐந்தாம் தேதிவரை ரத்து செய்யப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று Baoji-ல் தொடங்கியது.*

*இதில் இந்தியாவின் சார்பில் சங்கர் முத்துசாமி சுப்பிரமணியன், மீராபா லுவாங் மெய்ஸ்னம் ஆடவர் பிரிவிலும், இஷிதா நெஹி, தன்யா ஹேமந்த் மகளிர் பிரிவிலும் பங்கேற்கின்றனர்*

*<<<<<<>>>>>>*

*உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டி அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தியாவில் நடைபெற உள்ளது.*

*<<<<<<>>>>>>*

*16 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கூடைப்பந்துப் போட்டியில் இந்தியா – பஹ்ரைன் இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.*

*<<<<<<>>>>>>*